சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் வார்டு – 2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் நேற்று (22.08.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி ஆகியோர் உள்ளனர்.

கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வு

சேலத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆய்வு!

சேலம், ஆசுக.23-

சேலம் மாநகராட்சி நரசோதிப்பட்டி ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மற்றும் வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்களை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சேலம் மாநகராட்சி. சூரமங்கலம் மண்டலம் வார்டு-2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியிலும், நகர்ப்புறத்தைஒட்டியுள்ள கிராம ஊராட்சி, வெள்ளக்கல்பட்டிபகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்திலும் நேற்று (22.08. 2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர்இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்த தாவது:

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 21.08.2025 வரை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 65,658 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 75,830 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் வார்டு 2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியிலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, வெள்ளக்கல்பட்டிபகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்திலும், இடங்கணசாலை வார்டு 3, 4 க்குட்பட்ட பகுதிகளுக்கு பெருமாகவுண்டனூர் வார்டு - 4 சிவகாமி சுந்தரம் மஹாலிலும், பனமரத்துப்பட்டி பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6, 7 க்குட்பட்ட பகுதிகளுக்கு ஒண்டிக்கடை வார்டு 13 சமுதாய கூடத்திலும், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு 4 ரோடு, குட்டபட்டி ஜே.எஸ்.டி மஹாலிலும், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு சின்ன கவுண்டபுரம் செந்தில் மஹாலிலும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது.

அந்தவகையில் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் வார்டு 2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 10 நபர்களுக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.

அதேபோன்று, ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை ஆய்வு மேற்கொண்டு முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, சூரமங்கலம் உதவி ஆணையர் திருமதி லட்சுமி, ஓமலூர் வட்டாட்சியர் ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

மதுரை வடக்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.செல்வராஜ் அவர்கள் மேலூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், அவரை பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்து,

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஆகஸ்ட் 25 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21.08.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

ககன்யான் திட்டத்தின் கீழ் முதற்கட்ட சோதனை முயற்சி!

வரும் டிசம்பரில் விண்கலம் ஏவப்படும்!

இஸ்ரோ தலைவர்அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக.23-

புதுடெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய இஸ்ரோ தலைவர் நாராயணன், மனிதர்களை விண்ணுக்கும் அனுப்பும் ககன்யான் திட்டத்தின் கீழ் சுமார் 7 ஆயிரத்து 700 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், வரும் டிசம்பர் மாதம் சோதனை முயற்சியாக விண்கலம் ஏவப்படும் என்றும் தெரிவித்தார்.

மீதமுள்ள 2 ஆயிரத்து 300 சோதனைகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் அவர் கூறினார். நடப்பாண்டில் 196 செயல்திட்டங்களை முடித்து இஸ்ரோ சாதனைப் படைத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்த நாராயணன், 6 ஆயிரத்து 500 கிலோ எடை கொண்ட அமெரிக்காவின் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் இந்தியாவில் இருந்து ஏவப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆதித்யா எல்1ஐ பொறுத்தவரை, நடப்பாண்டில் 13 டெராபிட் தரவுகளை வெளியிட்டுள்ளதாகவும் இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டம் வேலூர் மாநகரம்,

19, 20 , 22, 31 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகரம், சத்துவாச்சாரி வடக்கு பகுதி, 19வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.நாகராஜ் மற்றும் 20வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.செல்வம் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, திரு. ஏ.சேகர் (3/2, நேதாஜி நகர், சத்துவாச்சாரி, வேலூர்632 009) அவர்கள் 19வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் திரு. எம்.சுரேஷ்குமார் (71, பெரிய தெரு, காந்தி நகர், சத்துவாச்சாரி, வேலூர்632 009) அவர்கள் 20து வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

22வது வட்டச் செயலாளர் ஆர்.பி.சசிகுமார் அவர்கள் பகுதிச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக திரு.எஸ்.பெருமாள் 31, புதுத் தெரு, ரங்காபுரம், சத்துவாச்சாரி, வேலூர்632009) அவர்கள் 22வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

சேண்பாக்கம் பகுதி, 31வது வட்டக் கழகச் செயலாளர் எம். சாய்சேதுராமன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, திரு. டி.அன்பழகன் (17/ஏ, படவேட்டம்மன் கோயில் தெரு, சேண்பாக்கம், வேலூர் 632 008) அவர்கள் 31வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அண்ணா அறிவாலயம்
சென்னை 18.
நாள் : 22.8.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தூத்துக்குடியில் இன்று

'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்!

அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக.23-

தூத்துக்குடியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் மாபெரும் மருத்துவ முகாம் இன்று நடைபெறுகிறது என்பது பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும் என்றும் அமைச்சர் பி.கீதாஜீவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசின் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் மருத்துவ முகாம்கள் நடைபெற எனும் திட்டத்தின் கீழ் உள்ளன. அதன்படி,

தூத்துக்குடியில் இன்று (ஆகஸ்ட் 23 ஆம் தேதி) சனிக்கிழமை அன்று "நலம் காக்கும் ஸ்டாலின் " திட்டத்தின் கீழ் மாபெரும் மருத்துவ முகாம் கீதா மெட்ரிக்குலேசன் பள்ளி, முத்தையாபுரத்தில் நடைபெற உள்ளது. இந்த முகாமானது காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை தொடர்பான ஆலோசனைகள், எலும்பு மற்றும் மூட்டு சிகிச்சை, முட நீக்கியல், மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம், குழந்தைகளுக்கான மருத்துவம், இதய நோய் தொடர்பான சிகிச்சைகள், நரம்பியல், தோல் சிகிச்சைகள், பல் மருத்துவம், காச நோய் மற்றும் தொழுநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை, பாதங்களை பாதுகாப்போம் பரிசோதனை, கண் சிகிச்சைகள், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை மற்றும் நீரழிவு நோய்க்கான சிகிச்சை, சித்த மருத்துவம் ஆகிய மருத்துவ சேவைகள் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளன.

மேலும் ஒன்றிணைந்த உயர்தர மருத்துவ சேவைகள், புறநோயாளிகளுக்கான சிறப்பு ஆலோசனைகள், அனைத்து விதமான மருத்துவ பரிசோதனை முறைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு அட்டை, மாற்றுத்திறாளிகளுக்கான சான்று அட்டை முதலான மருத்துவ சேவைகளும் ஒரே இடத்தில் பொதுமக்களுக்கு கிடைத்திடும் வகையில் இந்த 'நலம் காக்கும் ஸ்டாலின்' மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. பொதுமக்கள் இந்த மாபெரும் மருத்துவ முகாமில் திரளாக கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடன்சார்ந்த திட்டங்களின்கீழ்

தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு?

மக்களவையில் - கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக.22

ஒன்றிய அரசின் பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு என்று திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

(அ) தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஜன் சமர்த் போர்ட்டலை அரசு செயல்படுத்தியுள்ளதா?

(ஆ) அப்படியானால், இந்த இணையதளம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து அதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை;

(இ) பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் பயனாளிகளுக்கு அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை;

(ஈ) தமிழ்நாட்டில் மாவட்டவாரியாக பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட தொடர்புடைய தொகை;

(உ) தமிழ்நாடு பயனாளிகள் போர்டல் மூலம் அணுகும் திட்டங்களின் வகை வாரியான (விவசாயம், கல்வி, வணிகம், முதலியன) விவரங்கள்; மற்றும்

(ஊ) மாநிலத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய மக்களிடையே டிஜிட்டல் விழிப்புணர்வையும் போர்ட்டலை அணுகுவதையும் மேம்படுத்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய நிதி அமைச்சக இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

மரக்காணம் ஒன்றியம் – பெருமுக்கல் ஊராட்சியில்

காமாட்சி அம்மன் கோவிலில் திருப்பணிகள்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பூஜையை தொடங்கிவைத்தார்!

திண்டிவனம் ஆக 23-

மரக்காணம் ஒன்றியம் பெருமுக்கல் ஊராட்சியில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த காமாட்சி அம்மன் கோவில் ரூ 7.63 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை முதலமைச்சர் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததையடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திருக்கோயில் நடைபெற்ற பூஜைகளை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் பெருமுக்கல் ஊராட்சியில் 1000 ஆண்டுகளுக்குமுற்பட்ட பழமை வாய்ந்த காமாட்சி அம்மன்கோவில் உள்ளது.

பல நூற்றாண்டுகளைக் கடந்து பழமை வாய்ந்த பெருமுக்கல் காமாட்சி அம்மன் கோவிலைபுனரமைப்பு செய்து மகா கும்பாபிஷேகம் நடத்த வேண்டும்என அப்பகுதி பொதுமக்கள் முதலமைச்சருக்குகோரிக்கை வைத்தனர்.

பொது மக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக இந்து சமய அறநிலைத் துறை சார்பில் 7 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1000 ஆண்டுகள்பழமை வாய்ந்த பெருமுக்கல்காமாட்சி அம்மன்திருக்கோயில் புனரமைக்கும் பணியை தொடங்கிவைத்தார்.

இதைதொடர்ந்து கோவிலில் நடைபெற்ற திருப்பணிக்கான பூஜைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர்கலந்து கொண்டு தொடங்கிவைத்தனர்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் சார்ஆட்சியர் ஆகாஷ், இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் மோகனசுந்தரம், மரக்காணம் ஒன்றிய சேர்மன் தயாளன், துணைசேர்மன்பழனி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் சிவலிங்கம் உதவி ஆணையர் சக்திவேல்,வட்டாட்சியர் நீல வேணிஒன்றிய கவுன்சிலர் கள்ராஜேஸ்வரி லட்சுமிபதி, தேசம் பாலா, ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா சேட்டு,மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. அயலக அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் மாவட்ட மற்றும் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

நாகர்கோவில் மாநகரம்

தலைவர் - மக்கீன் அப்துல்சமது 70, கச்சப்புறத் தெரு, இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணைத் தலைவர் - அ.கோ. மகேஷ் 17/1, மீனாட்சி செட்டியார் தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

அமைப்பாளர் - தா. சுகின் 6/147, இசட்.சி. வின் நகர், களியங்காடு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) முனைவர் ரா. ஆனந்த் 195, சி.பி.எச். ரோடு, கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 2) மை. முகம்மது அலி 122/2, இரண்டாம் தெரு, ராஜீவ் நகர், இருளப்பபுரம், கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 3) செ. விஷ்ணு 2சி, 11/ஏ, தளியபுரம் ஓட்டுபுரை தெரு, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 4) அஜிந்த் கேப்ரியல் ஜெலஸ்டின் 73பி2, கிறிஸ்து நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21-08-2025.

எம்.எம்.அப்துல்லா
செயலாளர்
தி.மு.க.அயலகஅணி.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் பெருமுக்கல் ஊராட்சியில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த காமாட்சி அம்மன் கோவிலை ரூ 7.63 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகள் மேற்கொள்வதற்காக மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததையடுத்து முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.,விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் கலந்துகொண்டு திருக்கோயிலில் நடைபெற்ற பூஜைகளை தொடங்கி வைத்தனர்.அருகில் திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகாஷ் ,இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மோகனசுந்தரம், மரக்காணம் ஒன்றிய சேர்மன் தயாளன், துணை சேர்மன் பழனி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்கள் சிவலிங்கம், சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.